அரசினர் தோட்டம், ஆயிரம் விளக்கு பகுதிகளில்

# மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபாதை அமைக்கும் பணி தீவிரம்



ஆயிரம்விளக்கு மெட்ரோ ரயில் நிலையம் அருகே, பணி நிறைவடைந்த பகுதியில் சாலை சீரமைப்பு நடக்கிறது.

சென்னை, பிப். 3: வண்ணாரப்பேட்டை-டி.எம்.எஸ் வரையிலான வழித்தடத்தில் அமைய உள்ள அரசினர் தோட்டம், ஆயிரம் விளக்கு ஆகிய பகுதிகளில் 2 மெட்ரோ ரயில் நிலையங்களில் சுரங்க நடைபாதை அமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் திட்டத்தின் இறுதி வழித்தடமான வண்ணாரப்பேட்டை முதல் டி.எம்.எஸ் வரையிலான வழித்தடத்தை கடந்த மாதம் 19ம் தேதி முதல் 21ம் தேதி வரையில் 3 நாட்கள் ரயில்வே முதன்மை பாதுகாப்பு ஆணையர் மனோகரன் ஆய்வு செய்தார். இதே போல், இந்த வழித்தடத்தில் ஆயிரம் விளக்கு, எல்ஐசி, அரசினர் தோட்டம், சென்னை சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி ஆகிய 6 ரயில் நிலையங்களையும் அவர் முழுமையாக ஆய்வு செய்தார்.

அப்போது, ஒருசில பணிகளில் மட்டும் உள்ள குறைகளை கூறி அதை முடிக்கும்படி அதிகாரிகளை அறிவுறுத்தினார். இதையடுத்து, இந்த வழித்தடத்தில் சேவையை தொடங்க சில தினங்களுக்கு முன்பு பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்திற்கு கிடைத்தது. பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் கிடைத்த நிலையில் ஆயிரம் விளக்கு மற்றும் அரசினர் தோட்டம் ஆகிய இரண்டு மெட்ரோ ரயில் நிலையங்களில் ஒரு பக்கத்தில் மட்டுமே சுரங்க நடைபாதை அமைக்கும் பணிகள் முடிந்துள்ளது.

மற்றொரு பக்கத்தில் சுரங்க நடைபாதை அமைக்கும் பணிகள் தற்போது நடந்து வருகிறது. நடைபாதையை ஒட்டிய பகுதிகளில் சிலாப் கற்கள் பதிக்கும் பணி மற்றும் மேற்கூரை அமைக்கும் பணிகள் நடக்கிறது.

இதேபோல், எல்.ஐ.சி ரயில் நிலையத்திலும் சிறு,சிறு குறைபாடுகளை விரைவில் முடிக்க தீவிரமாக பணிகள் நடந்து வருகிறது. மேலும், ஒரு வாரத்திற்குள் இந்த பணிகள் முழுமையாக முடிக்கப்படும் என மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, கடந்த 27ம் தேதி இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், வரும் 10ம் தேதிக்குள் இந்த பணிகள் முடிந்து திருப்பூருக்கு தேர்தல் பிரசாரத்திற்கு வருகை தர உள்ள பிரதமர் மோடி தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.